*aபிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*23 04 2026 THURSDAY 6 45 AM*
***வணக்கம் - மாநில செய்திகள்***

***தலைப்புச் செய்திகள்***

- *தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.*
- *வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள, 12 மாற்று ஆவணங்களை பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*
- *வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான பணியில் இளைஞர்கள் ஈடுபட வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.*
- *மாநிலத்தின் உள் மாவட்டங்களில் கோடை வெப்பம் அடுத்த 4 நாட்களுக்கு 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரித்து காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*
- *ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று மும்பை அணியை எதிர்கொள்கிறது.*

*>>>>>><<<<<<*

*தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.*

*காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.*

*234 தொகுதிகளில் 5 கோடியே 73 லட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.*

*இத்தேர்தலில் 4 ஆயிரத்து 23 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.*

*மாநிலம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.*

*இதில் 325 வாக்குச்சாவடிகள் பெண் அதிகாரிகளால் மட்டும் கையாளப்படவுள்ளது.*

*5 ஆயிரத்து 949 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளன.*

*வாக்குச்சாவடிகள் தோறும் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நுண்பார்வையாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்*

வாக்குச்சாவடிகளில், வாக்காளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வாக்காளர்களின் செல்ஃபோன்களை வாங்கி வைப்பதற்கென, பிரத்யேக வசதி செய்யப்பட்டுள்ளது.

தேர்தலை சுமுகமாகவும், பாதுகாப்பாகவும் நடத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்பு பணியில் ஒரு லட்சத்து 47 ஆயிரம் காவலர்களும், 23 ஆயிரம் துணை ராணுவப் படையினரும் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இதற்கிடையே, வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மாற்று ஆவணங்களை பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ஆதார் அட்டை, PAN அட்டை, பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், வங்கி சேமிப்பு கணக்குப் புத்தகம், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் அடையாள அட்டை, ஓய்வூதிய ஆவணங்கள், 100 நாள் வேலைவாய்ப்புத் திட்ட அட்டை, தொழிலாளர் நலத்துறை வழங்கிய காப்பீட்டுத் திட்டத்திற்கான அட்டை போன்றவற்றை பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்று அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்காளர் அடையாள அட்டை வைத்திருந்த போதிலும், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை என்றால் வாக்களிக்க முடியாது என்றும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

இரண்டு மணிநேரத்திற்கு ஒருமுறை வாக்குப்பதிவு குறித்த தகவல்களை பொதுமக்கள் ECINET செயலியில் அறிந்துகொள்ளலாம் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இந்நிலையில், சட்டப்பேரவை தேர்தல் நடவடிக்கைகளை பார்வையிட 20 சர்வதேச பிரதிநிதிகள் தமிழகம் வந்துள்ளனர்.

பூட்டான், எகிப்து, மொரீசியஸ், இந்தோனேஷியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த இந்த பிரதிநிதிகள் இன்று வாக்குச்சாவடிகளுக்கு நேரில் சென்று வாக்குப்பதிவு நடைமுறைகளை பார்வையிடவுள்ளனர்.

நேற்று அவர்கள், சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் உள்ள ஒருங்கிணைந்த தேர்தல் கட்டுப்பாட்டு அறைகள் மற்றும் ஊடக கண்காணிப்பு அறைகளை பார்வையிட்டனர்.

இந்நிலையில், அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வாக்குப்பதிவுக்கு முன்னதாக, மாதிரி வாக்குப்பதிவு நடைபெற்றது.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள 4 சட்டப்பேரவை தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் மாதிரி வாக்குப்பதிவு நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுமன் 46 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, மேற்குவங்க மாநிலத்தில் முதல்கட்டமாக 152 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 4ஆம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

>>>>>><<<<<<

நாட்டை கட்டமைப்பதில் இளைஞர்கள் பங்களித்து, வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான பணியில் ஈடுபட வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அழைப்பு விடுத்துள்ளார்.

கர்நாடகாவின் Kalburgi-யில் உள்ள மத்திய பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

இளைஞர்கள், சவால்களை துணிச்சலுடன் எதிர்கொள்ள வேண்டும் என்ற அவர் கேட்டுக் கொண்டார்.

நாட்டின் வளமான கலாச்சாரம் மற்றும் அறிவுசார் பாரம்பரியத்தை பின்பற்ற வேண்டும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

>>>>>><<<<<<

ஜெர்மனி சென்றுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், தலைநகர் பெர்லினில் நேற்று அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் திரு. Boris Pistorius-சுடன் இருதரப்பு பேச்சு நடத்தினார்.

இந்தியா - ஜெர்மனி இடையே பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான வழிவகைகளை வலுப்படுத்துவது குறித்து இருவரும் விவாதித்தனர்.

பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்தும் அவர்கள் பேச்சு நடத்தினர்.

அதனைத் தொடர்ந்து, ஜெர்மனியில் வசிக்கும் இந்திய வம்சாவளியினரை சந்தித்து திரு. ராஜ்நாத் சிங் உரையாடினார்.

ஜெர்மனியில் வசிக்கும் சுமார் 3 லட்சம் இந்தியர்கள், வர்த்தகம், தொழில்நுட்பம், சுகாதாரம், கல்வி, கலை ஆகிய துறைகளில் பங்களிப்பு செய்து, இருநாடுகளுக்கு இடையே வலிமையான உறவுக்கு காரணமாக இருப்பதாக அமைச்சர் பாராட்டு தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென்தமிழக மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் இன்று மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் உள் மாவட்டங்களில் கோடை வெயிலின் தாக்கம், அடுத்த 4 நாட்களுக்கு 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரித்து காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

இந்தியா - நியூஸிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், அடுத்த வாரம் கையெழுத்தாகும் என்று நியூஸிலாந்து பிரதமர் திரு. கிறிஸ்டோஃபர் லக்சன் அறிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

*Hormuz* நீரிணை பகுதியை சட்டவிரோதமாக கடந்ததாக கூறி, இரண்டு கப்பல்களை ஈரான் கடற்படை சிறை பிடித்துள்ளது.

>>>>>><<<<<<

நாட்டின் ஜவுளித்துறை ஏற்றுமதி கடந்த நிதியாண்டில், இரண்டு புள்ளி ஒரு சதவீத வளர்ச்சியை கண்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

>>>>>><<<<<<

உத்தரபிரதேச மாநிலம், சுல்தான்பூரில் *Purvanchal* விரைவுச் சாலையில் போர்க்காலத்தின் போது அவசர பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள இடத்தில் விமானங்களை தரையிறக்கி, விமானப்படை சோதனை நடத்தியது.

>>>>>><<<<<<

ஆந்திரப்பிரதேச உயர்நீதிமன்ற தலைமை நிதிபதியாக திருமதி. *Lisa Gill* நியமிக்கப்பட்டுள்ளார்.

>>>>>><<<<<<

குஜராத் மாநிலம், Valsad மாவட்டத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர், 10 பேர் காயமடைந்தனர்.

>>>>>><<<<<<

தூத்துக்குடியில் ஒரு வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 65 லட்சம் ரூபாயை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

>>>>>><<<<<<

தேனி மாவட்டம், குரங்கனி அருகே சாலை வசதி இல்லாத மலைகிராமப் பகுதிகளுக்கு குதிரைகள் மூலம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை தேர்தல் அதிகாரிகள் அனுப்பி வைத்தனர்.

>>>>>><<<<<<

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் அருகே வெள்ளக்கெவி மலைகிராமத்திற்கு குதிரைகள் மூலம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் உள்ளிட்ட பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன.

>>>>>><<<<<<

தமிழகத்தில் மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், தேனி, விருதுநகர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் வரும் 27ஆம் தேதியன்று, வருங்கால வைப்பு நிதி அமைப்பு சார்பில் குறைதீர்ப்பு முகாம் நடைபெறுகிறது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று மும்பை அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி 40 ரன் வித்தியாசத்தில் லக்னோ அணியை வென்றது.

லக்னோவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த ராஜஸ்தான், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 159 ரன் எடுத்தது.

160 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய லக்னோ அணி, 18 ஓவரில் 119 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>>>><<<<<<

*இந்தியாவுக்கு எதிரான 3வது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், தென்னாப்பிரிக்க அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.*

*ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 192 ரன் எடுத்தது.*

*பின்னர் களமிறங்கிய தென்னாப்பிரிக்க அணி, 16 புள்ளி 3 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 193 ரன் எடுத்து வெற்றிபெற்றது.*

*ஐந்து போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் தென்னாப்பிரிக்க மகளிர் அணி 3 ஆட்டங்களில் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியுள்ளது.*

*>>>>>>END<<<<<<<*